34

# நந்திக்கலம்பகம்

**நந்திவர்மனின் மறைவு!**
**(கையறு நிலை)**

வானுறு மதியை அடைந்த துன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி!
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்!
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்!
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
யானும் என் கலியும் எவ்விடம்புகுவேம்?
நந்தியே நந்தயா பரனே!

நந்தி மன்னனே! எம் அருளிற் சிறந்த அரசனே! என்றும் ஒப்பற்ற வேந்தனே! நீ இறந்த அன்றே உன்முகத்தின் ஒளி விண்ணிலுள்ள நிலவிடம் சென்று விட்டது: புகழ் அனைத்தும் அலைகள் நிறைந்த கடலை அடைந்து விட்டது: உன் வீரம் கானகத்தில் உலவுகின்ற புலியிடம் புகுந்து விட்டது. வரையாது கொடுத்த உன் திருக்கரங்களின் கொடைத்திறம் கற்பகத்துடன் சேர்ந்து விட்டது. தேன் நிறைந்த தாமரை மலரிலே வீற்றிருக்கும் திருமகள் திருமாலிடம் குடிபுகுந்து விட்டாள். உன் திருமேனியோ எரிதழலில் புகுந்து அழிந்துவிட்டது: இனி, நானும் எனது துன்பமான வறுமையும் எங்கே யாரிடம் செல்வோம்? நந்திவர்மன் இறந்த பின்னர் இந்நூலாசிரியர் செயலற்று வருந்திப் பாடியது இப்பாட்டு.


இலவச விநியோகத்திற்காக